இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

(2003 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

2003, ஒகத்து மாதம் 22 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 12.25 தபாற் செலவு : ரூபா 4.50

[2003 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 21/2003

விமானப்பயணச்சீட்டுகளின் அல்லது கப்பல்மூலம் கடற்பயணமொன்று தொடர்பிலான பயணச்சீட்டொன்றின் வழங்குகைமீதான அறவீடொன்றை விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; 1961ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, விமானமேறல் வரிச்சட்டத்தை (365ஆம் அத்தியாயமான) வான்கலமோட்டுதற் சட்டத்தைத் திருத்துவதற்கும்; 1968ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, உல்லாசப்பயண அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற நிறுவனங்களின் மொத்த விற்பனை வரவு மீதான அறவீட்டுக்காக ஏற்பாடு செய்வதற்கும்; அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2003 செத்தெம்பர் 1 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

பாகம் I

விமானமேறல் அறவீடு

விமானமேறல் அறவீடு.

2. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும்,— பின்வரும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடிய, ஐக்கிய அமெரிக்க டாலர்களில் கணக்கிடப்படும் விமானமேறல் அறவீடு எனவழைக்கப்படவேண்டிய, அத்தகைய தொகை பின்வருவன தொடர்பில் விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும் —

(அ) இலங்கையை விட்டு வெளியேறுகின்ற விமானமொன்றில் ஏறும் பயணிகளுக்கு இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட ஒவ்வொரு விமானப் பயணச்சீட்டுத் தொடர்பிலும் அல்லது இலங்கையிலிருந்து வெளியேறுகின்ற ஆட்களுக்கு இலங்கையில் வழங்கப்பட்ட ஒவ்வொரு விமானப் பயணச்சீட்டுத் தொடர்பிலும், திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரத்துடன் தகுதிவாய்ந்த அதிகாரியால் தீர்மானிக்கப்படக்கூடியவரான அத்தகைய செலாவணி வீதத்தில் கணக்கிடப்பட்ட இலங்கை ரூபாக்களில் அதற்குச் சமமான தொகை "

ஆயின் எவ்வாறாயினும், அவ்வானூர்தியின் தரித்துச்செல்லும் பயணியொருவருக்கு இலங்கைக்கு வெளியே வழங்கப்படும் விமானப்பயணச் சீட்டொன்று தொடர்பில், விமானமேறல் அறவீடெதுவும் விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் ஆகாது; அத்துடன் ;

(ஆ) இலங்கையை விட்டு வெளியேறுகின்ற கப்பலொன்றில் ஏறுகின்ற பயணியொருவர் தொடர்பில் வழங்கப்படும் பயணச்சீட்டு ஒவ்வொன்று தொடர்பிலும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காகத் "தரித்துச்செல்லும் பயணி" என்பது, வந்திறங்கியதிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களினுள் ஓர் இணைக்கும் விமானத்தில் இலங்கையிலிருந்து புறப்படுகின்ற பயணியொருவர் என்று பொருளாகும்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் —

(அ) இரண்டு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் விடயத்திலும் ;

(ஆ) அவ்வானூர்தியின் அல்லது கப்பலின் ஆளணியிலுள்ள அலுவலர்களினதும் உறுப்பினர்களினதும் விடயத்திலும் ;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களின் விடயத்திலும்

ஏற்புடையனவாதலாகாது.

(3) அமைச்சரால் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளையொன்று கசெற்றில் வெளியிடப்பட வேண்டிய அடுத்துறும் கட்டளையொன்றினால் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

விமானமேறல் வரியை இயக்குநர் சேகரித்தல்.

3. வானூர்தி அல்லது கப்பல் ஒவ்வொன்றினதும் இயக்குநர், விமானமேறல் அறவீட்டைச் சேகரித்தல் வேண்டும் என்பதுடன், தகுதிவாய்ந்த அதிகாரியால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய முறையில் அத்தகைய அறவீட்டை இலங்கை அரசாங்கத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அத்தகைய தீர்மானத்துடன் இணங்கியொழுகுதல் இயக்குநர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

4. (1) விடயத்திற்கேற்ப ஒரு வானூர்திமூலம் அல்லது கப்பல்மூலம் இலங்கையை விட்டு வெளியேறுகின்ற ஆளொருவரிடமிருந்து அவ்வானூர்தியின் அல்லது கப்பலின் இயக்குநரினால் அரைமாதக் காலப்பகுதியொன்று தொடர்பில் சேகரிக்கப்படும் ஏதேனும் விமானமேறல் அறவீடு, திறைசேரிப் பிரதிச் செயலாளரின் அங்கீகாரத்துடன் தகுதிவாய்ந்த அதிகாரியால் தீர்மானிக்கப்பட்ட முறையில் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு செலுத்தப்படுதல் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் இயக்குநருக்கும் இடையே அத்தகைய கொடுப்பனவு தொடர்பில் எழக்கூடிய ஏதேனும் பிணக்கு, ஏற்புடையதான சட்டத்துக்கிணங்கத் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும்.

விமானமேறல் அறவீடானது இயக்குநர்களினால் தகுதிவாய்ந்த அதிகாரிக்குச் செலுத்தப் படுதல்.

(2) விமானமேறல் அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள பயணிகளின் எண்ணிக்கை பற்றி தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் இயக்குநருக்கும் இடையே பிணக்கொன்று எழுகின்ற விடயத்தில், இயக்குநரின் உரிமைக்கோரிக்கையை நிலைநாட்டுவதற்கு அவரது உடைமையிலுள்ள வேறேதேனும் ஆவணச்சான்றை தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அளிப்பதற்கு இயக்குநருக்குள்ள உரிமைக்கமைய, தகுதிவாய்ந்த அதிகாரியினால் அளிக்கப்படும் எண்ணிக்கைகளுக்கிணங்க இயக்குநர் விமானம் ஏற அறவீட்டைச் செலுத்துதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்ளுக்கிணங்க ஏதேனும் அரைமாதக் காலப்பகுதிக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் விமானமேறல் அறவீடு, சம்பந்தப்பட்ட வானூர்தியின் இயக்குநரினால் தகுதிவாய்ந்த அதிகாரிக்குச் செலுத்தப்படாதவிடத்து, அது தவணை தவறியதாகவிருப்பதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் குறிப்பிட்ட மாதத்தில் சராசரி வீதத்திலான பகர்நிலைக் கடன்வழங்கு வீதத்தின்மீது கணக்கிடப்பட்ட வட்டியொன்றும், இரண்டு சதவீதமும் அத்தொகையுடன் சேர்க்கப்படுதலும் வேண்டும். எவ்வாறாயினும், தவணை தவறுகின்ற ஒவ்வொரு மாதத்திற்கும் மேற்படி வீதத்திலான வட்டி, தவணைதவறியதாகவுள்ள மொத்தத் தொகையின்மீது விதிக்கப்படுதலும் அறவிடப்படுதலும் வேண்டும்.

5. (1) தகுதிவாய்ந்த அதிகாரியானவர் இப்பாகத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட பணத்தை பிரதி திறைசேரிச் செயலாளரால் காலத்துக்குக் காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய அறிவுறுத்துரைளுக்கிணங்க செலவீடு செய்தல் வேண்டும்.

தகுதிவாய்ந்த அதிகாரியானவர் திரட்டு நிதியத்துக்கு வரவுவைத்தல்.

(2) முகவரானவர், மற்றெல்லா இயைபான விபரங்களுடன், சேகரிக்கப்பட்ட தொகை பற்றிய மாதாந்த விபரத்திரட்டொன்றைத் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும். திறைசேரிப் பிரதிச் செயலாளர் அவசியமானதென அவர் கொள்ளுமிடத்து, அத்தகைய விபரத்திரட்டிலிருந்து எழுகின்ற ஏதேனும் கருமம்தொடர்பிலான அத்தகைய வேறு தகவலை அல்லது வெளிப்படுத்துதல்களைக் கோரலாம்.

தேவையான தகவலை இயக்குநர் கொடுத்துதவுதல்.

6. ஏதேனும் வானூர்தியின் அல்லது கப்பலின் இயக்குநர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தகுதிவாய்ந்த அதிகாரிக்கு தேவைப்படுத்தக்கூடியவாறான அவ்வானூர்திமூலம் அல்லது கப்பலின்மூலம் இலங்கையிலிருந்து இடம்பெயர்க்கப்பட்ட பயணிகள் தொடர்பாக அவ்வியக்குநரின் அறிவுக்குட்படுகின்ற அத்தகைய தகவலை கொடுத்துதவும்படி தகுதிவாய்ந்த அதிகாரியினால் வேண்டுகோள் விடுக்கப்படுமிடத்து, அவ்வாறு கொடுத்துதவுதல் வேண்டும்.

பதிவேடுகள்.

7. (1) ஓர் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழுள்ள, விடயத்திற்கேற்ப வானூர்தியொன்றில் அல்லது கப்பலொன்றில் ஏறுகின்ற பயணிகள் பற்றியும், இயக்குநரினால் சேகரிக்கப்படும் விமான மேறல் அறவீடு பற்றியும் இயக்குநர் தகுந்த பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்.

(2) விமானமேறல் அறவீட்டின் கொடுப்பனவும் சேகரிப்பும் தொடர்பான பதிவேடுகள், இயக்குநருக்குச் செய்யப்படும் வேறு கொடுப்பனவுகள் தொடர்பான எவையேனும் பதிவேடுகளிலிருந்து தனிவேறாகப் பேணப்படுதல் வேண்டும்.

(3) முதலாம் உட்பிரிவின்கீழ்ப் பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பதிவேடுகள் இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதியின் பின்னர் தகுதிவாய்ந்த அதிகாரியின் சம்மதத்துடன் அழிக்கப்படலாம்.

8. (1) இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் வானூர்தியிலுள்ள அல்லது கப்பலிலுள்ள பயணிகள் பற்றியும், அத்தகைய வானூர்தியின் அல்லது கப்பலின் புறப்படுகைகள் பற்றியுமான விபரங்களையும் தகுதிவாய்ந்த அதிகாரி தேவைப்படுத்தக்கூடியவாறாக விமானமேறல் அறவீடு அல்லது விமானமேறல் அறவீட்டைச் சேகரித்தல் தொடர்பாக அத்தகைய வேறு தகவலையும் கொடுத்து, தகுதிவாய்ந்த அதிகாரியால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விபரத்திரட்டுகளை இயக்குநர் கொடுத்துதவுதல் வேண்டும். அத்தகைய விபரத்திரட்டு ஒவ்வொன்றும் முப்பிரதிகளில் நிரப்பப்பட்டு அதன் பிரதியொன்று திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு இயக்குநரினால் அளிக்கப்படுதல் வேண்டும். விபரத்திரட்டுகள்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ளதெதுவும், அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட வானூர்தி தொழிற்பாடுகள் பற்றிய அல்லது ஒரு கப்பல் தொடர்பான தொழிற்பாடுகள் பற்றிய தகவலைக் கொடுத்துதவுவதற்கு, அத்தகைய சட்டத்தின் கீழ் இயக்குநருக்குள்ள கடப்பாட்டை மதிப்புக் குறைத்தலோ பாதித்தலோ ஆகாது.

(3) தகுதிவாய்ந்த அதிகாரியால் தேவைப்படுத்தப்பட்டவாறு தகுந்த விபரத் திரட்டுகளை வழங்குவதற்கு இயக்குநர் ஒருவர் தவறுமிடத்து, அத்தகைய வானூர்தியின் அல்லது கப்பலின் பயணிகள் பற்றிய பட்டியலிலுள்ள மொத்த எண்ணிக்கையினரான பயணிகளின்மீது கணக்கிடப்படுகின்றவாறான அத்தகைய தொகையை விமானமேறல் அறவீடாகச் செலுத்தும்படி இயக்குநரை தகுதிவாய்ந்த அதிகாரி தேவைப்படுத்தலாம்.

(4) வழங்கப்பட்ட தகவலிலிருந்து விமானப் பயணமொன்று அல்லது கப்பற் செல்கையொன்று முழுமையாக விட்டுவிடப்படுமிடத்து விமானமேறல் அறவீடு கணிப்பீடுசெய்யப்பட்டு அத்தகைய விமானப் பயணத்தின் அல்லது கடற்செல்கையின் மொத்த ஆசனக் கொள்ளளவின்மீது இயக்குநரிடமிருந்து விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

9. (1) இச்சட்டத்தைப் பின்பற்றி ஏதேனும் வானூர்தியின் அல்லது கப்பலின் ஓர் இயக்குநரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலின் சரிபிழையைச் சரிபார்க்கும் நோக்கங்களுக்காக, அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது தகவலின் சரிபிழை முகவரியினால் சரிபார்க்கப் படுதல்.

அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, தகுதிவாய்ந்த அதிகாரியானவர்,

(அ) வானூர்திமூலம் அல்லது கப்பல்மூலம் பயணிகளை ஏற்றிச் செல்லுதல் என்ற அவரது தொழிலின் நோக்கங்களுக்காக அத்தகைய இயக்குநரினால் பயன்படுத்தப்படும் இலங்கையிலுள்ள எவையேனும் வளவுகளினுட் பிரவேசிக்கலாம் ; அத்துடன்

(ஆ) (i) அந்த இயக்குநரின் ஏதேனும் வானூர்திமூலம் அல்லது கப்பல்மூலம் இலங்கையிலிருந்து இடம்பெயர்க்கப்படும் பயணிகள் பற்றிய ஏதேனும் பதிவேட்டைச் சோதனைசெய்து அதன் பிரதிகளையெடுக்கலாம் ; அத்துடன்

(ii) இயக்குநரினால் அவரது தொழில் தொடர்பாக இச்சட்டத்தினைப் பின்பற்றி அல்லது வேறு வகையாக வைத்திருக்கப்படுகின்றவாறாக, அத்தகைய இயக்குநரினால் சேகரிக்கப்படும் விமானமேறல் அறவீடு பற்றிய ஏதேனும் பதிவேட்டைச் சோதனைசெய்து பிரதிகளை யெடுக்கலாம்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரியானவர் அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, இலங்கையை வந்தடைகின்ற அல்லது இலங்கை யிலிருந்து புறப்படுகின்ற ஏதேனும் வானூர்தியினுள் அல்லது கப்பலினுட் பிரவேசித்து, விடயத்துக்கேற்ப அவ்வானூர்தியின் மூலம் அல்லது கப்பலின்மூலம் இடம்பெயர்க்கப்படவுள்ள பயணிகள் தொடர்பான தகவலைக் கொண்டுள்ள ஏதேனும் ஆவணத்தை தகுதிவாய்ந்த அதிகாரியால் சோதனை செய்யப்படு வதற்காகக் காண்பிக்கும்படி அவ்வானூர்தியின் அல்லது கப்பலின் கபிதானைத் தேவைப்படுத்தலாம்.

பொருள்கோடல்.

10. இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத் தினாலன்றி —

"கபிதான்" என்பது, ஒரு வானூர்தி அல்லது கப்பல் தொடர்பாக, அப்போதைக்கு அந்த வானூர்திக்கு அல்லது கப்பலுக்குப் பொறுப்பாகவுள்ள, அதன் ஏவுதலை அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள ஆள் என்று பொருள்படும் ;

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் ஆட்களிடமிருந்தும் விமான மேறல் அறவீடு விதித்தல் தொடர்பான எல்லா விடயங்கள் தொடர்பிலும் —

(அ) வானூர்திமூலம் 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை குடியியல் வான்போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்போக்கு அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதி என்று பொருள்படும்,

(ஆ) கப்பல்மூலங்களின் 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிக கப்பற்றொழிற் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வணிக கப்பற்றொழில் பணிப்பாளர் என்று,

பொருள்படும் ;

"இயக்குநர்" என்பது —

(அ) வானூர்தியொன்று தொடர்பாக அவ்வானூர்தியின் சொந்தக்காரர், சொந்தக்காரரின் சார்பில் செயற் படும் ஆளொருவர் அல்லது கபிதான் என்று பொருள்படும் ; அத்துடன்

(ஆ) கப்பலொன்று தொடர்பாக, அக்கப்பலின் சொந்தக் காரர், அச்சொந்தக்காரரின் சார்பில் செயற்படுப வரும் 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கப்பற் றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தற் சட்டத்தின் கீழ் உரிமம் ஒன்றை தம்மகத்தே கொண்டி ருப்பவருமான ஆளொருவர் என்று, அல்லது அக்கப்பலின் கபிதான் என்று பொருள்படும் ;

"பயணிகள் பற்றிய பட்டியல்" என்பது, இயக்குநரினால் மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்டு ஒரு சேரிடத்திலிருந்து இன்னொன்றுக்கு வான் பயணத்தின்போது வானூர்தியொன்றில் அல்லது கடற்செல்கையின்போது ஒரு கப்பலில் கொண்டுசெல்லப்படும் பயணிகள் பற்றிய பட்டியலொன்று என்று பொருள்படும்.

பாகம் II

உல்லாசப் பயண அபிவிருத்தி அறவீடு

உல்லாசப் பயண சபைச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள் மீது அறவீடு விதித்தல்.

11. இச்சட்டத்தின் இப்பாகம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப்பயண அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் ஏதேனும் ஆண்டில் அத்தகைய நிறுவனத்தின் மொத்த விற்பனை வரவின் ஒரு சதவீத அறவீடொன்று அறவிடப்படுதல் வேண்டும் : இது உல்லாசப்பயண அபிவிருத்தி அறவீடு என அழைக்கப்படும்.

உல்லாசப் பயண அபிவிருத்தி அறவீட்டைக் கொடுப்பனவு செய்யும் முறை.

12. (1) பதினோராம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட அறவீடு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் இயைபான அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் செலுத்தப்படுதலும் 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பயணச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை உல்லாசப் பயணச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியால் சேகரிக்கப்படுதலும் வேண்டும்.

(2) இலங்கை உல்லாசப் பயணச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சேகரிக்கப்பட்ட அறவீடு முழுவதையும் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரத் திரட்டுகளை அதற்கென விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அவர் அத்தகைய தொகை சேகரிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுள் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

மொத்த விற்பனை வரவு என்பதன் வரைவிலக்கணம்.

13. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக மொத்த விற்பனை வரவு என்பது —

(அ) உல்லாசப் பிரயாணிகளின் ஹோட்டல் ஒன்று தொடர்பில், பத்துச் சதவீதம் வரையிலான சேவைக்கட்டணமும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம்

இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் நியதிகளின்படி அரசாங்கத்துக்குச் செலுத்தப்பட அல்லது செலுத்தப்படற்பாலதான சேர்பெறுமதி வரியும் புறநீங்கலாக, மொத்த விற்பனைகளிலிருந்து பெறப்பட்ட தொகை என்று பொருள்படும்

(ஆ) பிரயாண முகவர் ஒருவர் தொடர்பில் அவரால் வேறு உள்ளூர் சேவை வழங்குநர்களுக்கு அவருக்கு ஆற்றப்பட்ட சேவைகள் தொடர்பில் செய்யப்பட்ட கொடுப்பனவுகளும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் நியதிகளின்படி அரசாங்கத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான சேர்பெறுமதி வரியும் புறநீங்கலாக, உல்லாசப் பயணக் கைத்தொழில் தொடர்பில் ஆற்றப்பட்ட சேவைகளிலிருந்து மொத்தப் பெறுகைகள் என்று பொருள்படும்

(இ) உல்லாசப் பயணக் கடையொன்று தொடர்பில் மொத்த விற்பனைகள்மீது 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் நியதிகளின்படி அரசாங்கத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான சேர்பெறுமதி வரி புறநீங்கலாக, அத்தகைய ஏதேனும் கடையிலிருந்து உற்பத்திப் பொருட்களின் அத்தகைய விற்பனைகளிலிருந்து பெறப்பட்ட தொகை என்று பொருள்படும்" அத்துடன்

பாகம் III

1961 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, விமானமேறல் வரிச் சட்டத்தை நீக்குதலும் வான்செலவுச் சட்டத்தைத் திருத்துதலும்

1961ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்.

14. 1961 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, விமானமேறல் வரிச் சட்டம் இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

நிலைபெயர் கால ஏற்பாடுகள்.

15. (1) 2003 செத்தெம்பர் 1 ஆம் தேதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவையும் அத்தகைய பயணச்சீட்டுக்களின் மீதான பயணம், 2003 செத்தெம்பர் 1 ஆம் தேதிக்குப் பின்னர் நடைபெறுகின்ற கீழ் குறித்துரைக்கப்பட்ட விமானமேறல் அறவீடு சேகரிக்கப்பட்டிருக்கவில்லையோ அந்தப் பயணச்

சீட்டுக்களாக உள்ளவை யுமான விமானப் பயணச்சீட்டுக்களை அல்லது கடற் பயணம் தொடர்பான பயணச்சீட்டுக்களைத் தம்மகத்தே வைத்திருக்கும் எல்லா ஆட்களும், இச்சட்டத்தின்கீழ் விமானமேறல் அறவீடாக வருமதியாகும் தொகையை விடயத்திற்கேற்ப விமான நிலை யத்தில் அல்லது புறப்படும் துறைமுகத்தில் தகுதிவாய்ந்த அதிகாரியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவல ரொருவருக்குச் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண் டும். விமானமேறல் அறவீடு முறையாகச் செலுத்தப்பட்டுள்ளது என்ற புறக்குறிப்பொன்று தகுதிவாய்ந்த அதிகாரியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் பயணச்சீட்டில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) விமானமேறல் அறவீட்டைச் செலுத்துமாறு (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வேண்டப்படுமிடத்து அதனைச் செலுத்த மறுக்கும் ஆளெவரும் விடயத்திற்கேற்ப வானூர்தியில் அல்லது கப்பலில் ஏறுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(3) ஒராம் உட்பந்தியின் நியதிகளின்படி விமானமேறல் அறவீட்டைச் சேகரிக்கத் தவறுகின்ற தகுதிவாய்ந்த அதிகாரியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், எந்தப் பயணச்சீட்டு தொடர்பில் அறவீடு அவ்வாறு சேகரிப்பட வில்லையோ அந்தப் பயணச்சீட்டு ஒவ்வொன்று தொடர்பிலும் ஐந்நூறு ரூபாவான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் விமானமேறல் அறவீடாகச் சேகரிக் கப்படும் தொகை, தகுதிவாய்ந்த அதிகாரியினால் அதிகார மளிக்கப்பட்ட அலுவலரால் தினந்தோறும் தகுதிவாய்ந்த அதிகாரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய தொகையைத் திரட்டுநிதியத்தில் வரவுவைத்தல் வேண்டும். அத்தகைய அறவீடு தொடர்பான தகவல் அடங்கிய விவரத்திட்டொன்று வாரந்தோறும் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அனுப்பப் படுதல் வேண்டும்.

365 ஆம் அத்தியாயத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. (365 ஆம் அத்தியாயமான) வான் செலவுச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2அ) என்னும் உப்பிரிவை நீக்கம் செய்வதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "(உட்பிரிவு (2அ) வின் கீழ் அவரால் சேகரிக்கப்பட்ட விமான மேறல் வரிகள் உட்பட)" என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலமும்.

பாகம் IV

பொது

17. (1) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது, எந்தக் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ, அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) முற்போந்தவற்றின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர் ஒழுங்குவிதியின் மூலம் —

(அ) இயக்குநரால் விமானமேறல் அறவீட்டின் கொடுப்பனவு மற்றும் சேகரிப்பு விதத்துக்கும் முறைக்கும்;

(ஆ) இயக்குநர் ஒருவரால் முகவருடன் வைப்பிலிடப்படவேண்டிய ஏதேனும் தொகைக்கும் அல்லது ஓராண்டை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு இயக்குநரால் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு செய்யப்படவேண்டிய அல்லது வழங்கப்படவேண்டிய வங்கி உத்தரவாதத்திற்கும் ;

(இ) இச்சட்டத்தின்கீழ் சேகரிக்கப்படும் அறவீடுகளின் செலவீட்டில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்கும் :

(ஈ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக விபரத்திரட்டுக்களைச் செய்வதற்கும் அத்தகைய விவரத்திரட்டுகளின் படிவத்திற்கும் :

(உ) 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பயண அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற நிறுவனங்களிடமிருந்து அறவீட்டின் கொடுப்பனவு மற்றும் சேகரிப்பு என்பவற்றின் விதத்துக்கும் முறைக்கும்,

ஏற்பாடு செய்யலாம்.

18. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.